**DEPOSITION OF WITNESS**

In the Court of District Munsif cum Judicial Magistrate, Cheyyur
CC Case No.173/2025
Prosecution witnesses. PW2, LW3

| | |
|---|---|
| பெயர். திருமதி.மங்களபிரியா | ஜாதி. |
| கணவர் பெயர்.திரு.குசலவன் | தொழில். |
| கிராமம். | சமயம். |
| தாலுக்கா. | வயது. |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 27 day of July, 2026**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. U/s.355 of BNSS ன்படி மனு தாக்கல் செய்து அந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

முதல் விசாரணை:-

1. நான் தற்போது வேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இதற்கு முன்பு நான் 2025 ம் வருடம் மதுராந்தகம் மதுவிலக்கு அமல் பிரிவல் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 17.02.2025 அன்று 16.00 மணியளவில் நான், முதல் நிலை காவலர் முத்து 344 மற்றும் தலைமை காவலர் ராஜேஷ் 1352 ஆகியோருடன் மதுவிலக்கு வேட்டையாக சூணாம்பேடு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இடங்களில் கண்காணித்து வந்தபோது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 16.00 மணிக்கு கொளத்தூர் கிராமம் சென்று ஒரு வீட்டின் அருகே இருந்த பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த நீதிமன்ற ஆஜர் எதிரி தனுஷ், வயது 28, த/பெ.சந்திரன், எம்.ஜி.ஆர் தெரு, கொளத்தூர் கிராமம், செய்யூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் என்பவரை பிடித்து அவர் இருந்த இடத்தை சோதனை செய்தபோது சுமார் 15 லிட்டர் கொள்ளளவு கொண்ட மண்பாணையில் சுமார் 12 லிட்டர் பனங்கள் இருந்தது. அதை முகர்ந்து

பார்த்தபோது புளித்த வாடையுடன் வாய்குமட்டலும் வந்ததால் அவர் பனங்கள் இறக்கி விற்பனை செய்ய வைத்திருந்தது தெரிந்தது. மேற்படி குற்றத்திற்காக எதிரியை 16.15 மணிக்கு கைது செய்து எதிரியிடமிருந்து பனங்கள்ளை உடன் வந்த எங்கள் முன்னிலையில் மேற்படி பனங்கள்ளை பகல் 16.30 மணிக்கு நான் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன். **(அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு பொதுஜன சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தால் போலிஸ் பார்ட்டி சகிதம் செய்து எங்கள் முன்னிலையில் பின்பு அன்றைய தினம் 16.45 மணிக்கு அழித்தல் மகசர் மூலம் சம்பவ இடத்திலேயே கொட்டி அழித்து அழித்தல் மகசர் தயார் செய்தேன். **(அந்த அழித்தல் மகசர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி எதிரியிடமிருந்து தக்க பிணை பெற்று ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.

3. பின்பு எதிரியுடன் காவல் நிலையம் வந்து 17.30 மணிக்கு எதிரி மீது நிலைய குற்ற எண்.74/2025, U/s.4(1)(C) TNP Act r/w 4(1)(d) TNP Act ல் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின் இறுதியாக விசாரணையை முடித்து எதிரி மீது கடந்த 18.02.2025 ம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்குக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சம்பவ இடம் சென்றிருந்தால் வரைபடம் தயார் செய்து பொதுஜன சாட்சிகளை சாட்சியாக

விசாரித்திருப்பேன் என்றாலும் எதிரிக்கும், இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது)**

**மறு விசாரணை...** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.